மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுடைய பாராட்டோடு, பேரவைத் தலைவருடைய பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் மேம்பால அணுகுசாலை மற்றும் 4 வழிச் சாலைப் பணிகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிறப்புக் கவன ஈர்ப்பு. கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் மேம்பாலத்தின் அணுகுசாலை மிகவும் குறுகியதாக இருப்பது குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், பேரவை விதி 55–ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்துள்ளார். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பு என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள், சுருக்கமாகப் பேசுங்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், நாகர்கோவிலை அடுத்து முக்கிய நகரங்களில் மார்த்தாண்டம் ஒரு முக்கிய நகரமாகும். மார்த்தாண்டம் நகரில் போக்குவரத்து நெருக்கடியைத் தீர்ப்பதற்கு ரூ.210 கோடியில் ஒரு மேம்பாலம் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த மேம்பாலம் ஆரம்பிக்கும் பகுதியிலும், முடிகிற பகுதியிலும் இருக்கக்கூடிய இணைப்புச் சாலைகள், அணுகுச் சாலைகள் மிகவும் குறுகலாக இருக்கின்றன. லாரி போக முடியாது; பஸ் போக முடியாது; எந்த வசதியுமே கிடையாது. 10,000–க்கும் அதிகமான வர்த்தகர்கள் அங்கு இருக்கிறார்கள். அங்கு மருத்துவமனைகள் இருக்கின்றன; பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன; கல்லூரிகள் இருக்கின்றன; மத வழிபாட்டுத்தலங்கள் இருக்கின்றன. ஆனால், 5,000 வியாபாரிகள்கூட வியாபாரம் செய்ய முடியாத மோசமான நிலை அங்கு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கேள்விக்கு வந்துவிடுங்கள், கேள்வியைக் கேளுங்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *இன்னும் ஒரே ஒரு கேள்வி இருக்கிறது. இதுபோலத்தான் கன்னியாகுமரி மாவட்டத்தில், 4 வழிச்சாலை அமைக்கும் பணி 2,700 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆரம்பிக்கப்பட்டது. 2014–ல் இந்தத் திட்டத்தை ஆரம்பித்தார்கள். களியக்காவிளை–கன்னியாகுமரி சாலை சுமார் 70 கிலோ மீட்டர் தூரத்திற்கு அந்தச் சாலைப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அதில் 75 சதவிகிதப் பணிகள் முடிந்துவிட்டன. வேலை முடியாததற்கான காரணத்தையும் நான் சொல்கிறேன். நில ஆர்ஜிதம் செய்யும்போது, நிலத்திற்கான தகுந்த இழப்பீட்டுத் தொகையைக் கொடுக்கவில்லை. வேண்டுமென்றே பணியை இழுத்துக்கொண்டே செல்கிறார்கள். எனவே, கன்னியாகுமரி மாவட்ட மக்கள் ஒட்டுமொத்தமாக போக்குவரத்து நெரிசலில் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, இந்தப் பிரச்சினையை விரைவாக தீர்த்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலை வருடாந்திர திட்டம் 2015–2016–ன் மூலமாக மார்த்தாண்டம் பகுதியிலே 2.70 கிலோ மீட்டர் தூரத்திற்கு பாலம் கட்டி முடிக்கப்பட்டு, 1–3–2019 முதல் மக்கள் பயன்பாட்டில் உள்ளது. மார்த்தாண்டம் மேம்பாலத்தின் ஓடுதளமானது 10 மீட்டர் அகலம் கொண்டதாகும். சந்தை சாலை* (Market road) *ஓடுதளமானது 6.50 மீட்டர் அகலம் கொண்டதாக இருக்கிறது. மேம்பாலத்தின் சேவை சாலை பம்பம் பகுதி நீங்கலாக மீதமுள்ள இரு பக்கமும் சாலையின் அகலம் 5.50 மீட்டர் கொண்டதாகவும், மேம்பாலம் முடிவடையும்போது பம்பம் பகுதியின் இடதுபுற சேவை சாலையின் அகலம் 2.50 மீட்டராகவும் இருக்கிறது. நில எடுப்புப் பணிகள் முடிவடைந்து சேவை சாலைகள் விரிவாக்கம் செய்யப்பட்டு, 4 மீட்டர் அகலத்திற்கு பம்பம் பகுதியின் சேவை சாலை அமைக்கப்பட்டு, 6–10–2020 முதல் பயன்பாட்டிலே உள்ளது. இருபுறமும் சேவை சாலைகளிலும் வாகனப் போக்குவரத்து எவ்வித இடையூறும் இல்லாமல் இயங்கிக் கொண்டிருக்கிறது. அப்பகுதியில் சாலையின் இரு பக்கங்கள் முழுவதும் வர்த்தகப் பகுதியாக இருந்து வருவதால் சேவை சாலையை அகலப்படுத்த கூடுதலாக நில எடுப்பு எடுக்க வேண்டும். அப்படி எடுத்தால் வர்த்தகம் பெரிதும் பாதிக்கப்படும் என்று அந்தப் பகுதியினர் குறிப்பிடுகிறார்கள். எனவே, திருவனந்தபுரம் மற்றும் நாகர்கோவில்*

நோக்கிச் செல்லும் அனைத்து இலகு ரக வாகனங்கள், கன ரக வாகனங்கள், மேம்பாலத்தின் சேவை சாலையைப் பயன்படுத்துகிற வாகனங்களின் எண்ணிக்கை தற்போது மிகவும் குறைவாகவே இருக்கிறது. எனவே, சேவை சாலையை விரிவாக்கம் செய்ய வேண்டிய தேவையில்லை என்பது அரசினுடைய நிலைப்பாடாக இருக்கிறது.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த 4 வழிச்சாலையைப் பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளரை அழைத்து, அந்தப் பணிகளை இன்னும் விரைந்து செய்வதற்கு, அதற்கு முன்னுரிமை அளித்து, இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

(ஆ) திருக்கோயில்கள், மொட்டையடிக்கும் தொழிலாளர்களின் நிலை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருக்கோயில்களில் மொட்டையடிக்கும் தொழிலாளர்களின் நிலை குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள், முனைவர் கோவி. செழியன், அரசு தலைமைக் கொறடா அவர்களும், திரு. A.P. நந்தகுமார் அவர்களும் பேரவை விதி 55–ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பு என்ற முறையில் எடுத்துக்கொள்கின்றேன். இதுகுறித்து ஒருவர் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. A.P. நந்தகுமார் அவர்கள்.

முற்பகல் 10–40

திரு. A.P. நந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘மொட்டைக்கு இனி இல்லை கட்டணம்’ என்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களின் அற்புதமான திட்டம், பக்தகோடிகள் மற்றும் மக்களிடையே வரவேற்பைப் பெற்றிருக்கின்றது. ஏற்கெனவே, திருக்கோயில்களில் பணியாற்றிக் கொண்டிருந்த மொட்டையடிக்கும் பணியாளர்களின் வாழ்வாதாரம் அதிகளவு பாதிக்கப்படுவதாக ஊடகங்களிலேயும், மொட்டையடிக்கும் பணியாளர்களிடையேயும் பேசப்படுகிறது. இலவசம் என்பதால் அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவது உண்மையா? அப்படி பாதிக்கப்படுபவர்களுக்கு தாயுள்ளம் கொண்ட தலைவர் அவர்களின் அரசு உரிய நிவாரணம் வழங்குமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து, அமர்கின்றேன்.